**சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்**

முன்னிலை: திரு. டி. செல்வம், எம்.எல்.,
சார்பு நீதிபதி, சத்தியமங்கலம்.

2017ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 18ம் நாள் திங்கட் கிழமை
(2048 திருவள்ளுவராண்டு ஹேவிளம்பி வருடம் மார்கழி திங்கள் 03-ம் நாள்)

**அசல் வழக்கு எண்.89/2016**

1. லட்சுமி
2. எஸ். எஸ். அருணாம்பிகா ... வாதிகள்

/எதிர்/

1. ஸ்ரீதர்
2. துரைசாமி
3. ஜோதி
4. எஸ். எஸ். ஜவகர்
5. கிருஷ்ணவேணி
6. அமுதவேணி
(மனநிலை பாதிக்கப்பட்டவர்
இவருக்கு பாதுகாவலர் 4-ம்
பிரதிவாதி எஸ்.எஸ். ஜவகர்)
7. வெங்கடேஸ்வரி ... பிரதிவாதிகள்

இவ்வழக்கானது 11.12.2017-ம் தேதியன்று என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்த போது வாதிகள் தரப்பில் வழக்குரைஞர் திரு. எஸ். ராஜகோபால் அவர்கள் ஆஜராகியும், 4 மற்றும் 6 பிரதிவாதிகள் தரப்பில் வழக்குரைஞர் திரு. ஏ. சிவகுமார் அவர்கள் ஆஜராகியும், 7-ம் பிரதிவாதி தரப்பில் வழக்குரைஞர் திரு. சி. கே. ரமேஷ் அவர்கள் ஆஜராகியும், 1,2,3,5 பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் ஆஜராகாததாலும், 4,6,7 பிரதிவாதிகள் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததாலும் ஒருதலைபட்சமாக்கப்பட்டும், வாதிகள் தரப்பில் கேட்டும், வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும் இதுநாள் வரையில் இந்நீதிமன்ற ஆய்விலிருந்து வந்த இவ்வழக்கில், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்...

## தீர்ப்புரை

*1. வழக்கின் பரிகாரம்*:

*வழக்குச் சொத்தை 7 சம பாகங்களாக பிரித்து அதில் ஒரு பங்கை வாதிகளுக்கு ஒரு சேர ஒதுக்கீடு செய்தும், தனி சுவாதீனம் கொடுக்க வேண்டுமென்றும், 2 முதல் 7 பிரதிவாதிகள் வழக்குச் சொத்தை மூன்றாம் நபருக்கு விற்பனை செய்து வில்லங்கம் ஏற்படுத்தக் கூடாது என்ற நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டும், செலவுத் தொகை கேட்டும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.*

*2. வழக்குரையின் சுருக்கம்:*

*சத்தியமங்கலம் வட்டம், வரதம்பாளையம் கிராமத்தில் வசித்து வந்த சாமியப்பன் முதலியார், ராஜம்மாள் ஆகியோர்களுக்கு ஸ்ரீதர், துரைசாமி, சுகுமார், ஜவகர் என்ற நான்கு மகன்களும், ஜோதி, கிருஷ்ணவேணி, அமுதவேணி, வெங்கடேஷ்வரி என்ற நான்கு மகள்களும் வாரிசுகள் ஆவார்கள். மேற்படி வாரிசுகளில் சுகுமார் என்பவர் இறந்துவிட்டதால் அவருடைய வாரிசுகள் இந்த வழக்கில் வாதிகள் ஆவார்கள். மற்றவர்கள் இந்த வழக்கில் 1 முதல் 7 பிரதிவாதிகளாக சேர்க்கப்பட்டுள்ளார்கள். வழக்குச் சொத்துக்கள் ராஜம்மாளின் தந்தை மாரிமுத்து முதலியாருக்கும், தாயார் குஞ்சாரம்மாளுக்கும் பாத்தியப்பட்டது. அவர்கள் இறந்த பிறகு அவர்களின் ஒரே மகளான ராஜம்மாளுக்கு வாரிசு முறையில் பாத்தியப்பட்டதாகும். சாமியப்ப முதலியார் 28.020.1996—ல் இறந்துவிட்டார். ராஜம்மாள் 06.05.2006—ல் இறந்துவிட்டார். சுகுமார் 19.02.2001—ல் இறந்துவிட்டார். முதல் மகன் ஸ்ரீதர் குடும்ப உறுப்பினர்களை எதிர்த்து கலப்பு திருமணம் செய்து கொண்டுவிட்டதால் அவர் ராஜம்மாளின் சொத்துக்களில் எந்த பாகமும் கேட்கப்*

போவதில்லை என்று விடுதலைப் பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளார். எனவே அவருக்கு ராஜம்மாளின் சொத்துக்களில் பாகம் எதுவும் கிடைக்க கூடியதல்ல. 6–ம் பிரதிவாதி சற்று மனநிலை சரியில்லாதவராக இருப்பதால் அவரை 4–ம் பிரதிவாதி காப்பாளராக இருந்து பராமரித்து வருகிறார். மற்றவர்கள் திருமணம் செய்து கொண்டு தனித்தனியாக குடும்பம் நடத்தி வருகிறார்கள். வாதிகள் தங்களுக்கு கிடைக்க வேண்டிய பாகத்திற்கு பிரதிவாதிகளிடம் கேட்ட போது வழக்குச் சொத்துக்களைப் பொறுத்து ராஜம்மாள் 27.08.1996–ல் ஒரு உயில் எழுதி வைத்திருப்பதும், அந்த உயிலுக்கு பின்பு இந்த 4–ம் பிரதிவாதி 04.01.2008–ல் ஒரு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக் கொடுத்தும், 25.11.2008–ல் ஒரு பாக பிரிவினை பத்திரமும் ஏற்படுத்திக் கொண்டுள்ளார்கள். மேற்படி ஆவணங்களில் இந்த வாதிகள் தரப்பினர்கள் கிடையாது. எனவே வாதிகளுக்கு வழக்குச் சொத்தில் 1/7 பங்கு கிடைக்க கூடியதாகும். இது தொடர்பாக நி.ம.எண்.41/2008 என்ற மனுவில் சத்தியமங்கலம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து சுவாதீனம் பெறும் போது பிரச்சனை வேண்டாம் என்று சுமூகமாக பாக பிரிவினை செய்து கொள்ளலாம் என்று பிரதிவாதிகள் சொல்லியுள்ள பிறகும் பாக பிரிவினை செய்து கொடுக்காததாலும் வழக்குச் சொத்தை மூன்றாம் நபருக்கு விற்பனை செய்ய முயற்சித்ததாலும், 17.01.2016–ல் வழக்கறிஞர் அறிவிப்பு கொடுக்கப்பட்டது. அதற்கு 4–ம் பிரதிவாதியிடமிருந்து தவறான பதில் அறிவிப்பு கொடுக்கப்பட்டது. எனவே வழக்குச் சொத்தை 7 சம பாகங்களாக பிரித்து அதில் ஒரு பங்கை வாதிகளுக்கு ஒரு சேர ஒதுக்கீடு செய்தும், தனி சுவாதீனம் கொடுக்க வேண்டுமென்றும், 2 முதல் 7 பிரதிவாதிகள் வழக்குச் சொத்தை மூன்றாம் நபருக்கு விற்பனை செய்து வில்லங்கம் ஏற்படுத்தக் கூடாது என்ற நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டும், செலவுத் தொகை கேட்டும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. 4,6,7 பிரதிவாதிகள் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததாலும், 1,2,3,5 பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் ஆஜராகாததாலும் ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ளார்கள்.

4. பிரச்சனை: வாதிகள் கோரியபடி வழக்குச் சொத்தில் வாதிகளுக்கு பாக பிரிவனை கிடைக்க கூடியதா என்பதேயாகும்?

5. இந்த வழக்கில் வாதிகள் தரப்பில் திருமதி. லட்சுமி என்பவர் வா.சா.1 ஆகவும், திரு. நாகராஜன் என்பவர் வா.சா.2 ஆகவும் விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.17 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

6. தீர்வு :

6.1. வாதி தரப்பில் கேட்கப்பட்டது. வழக்குரை, வாய்மொழி சாட்சியங்கள், சான்றாவணங்கள் மற்றும் வழக்கு கோப்புகள் பரிசீலிக்கப்பட்டது.

6.2. வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள உறவு முறைகளைப் பொறுத்து இந்த வாதிகள் சுகுமாரின் வாரிசுகள் என்பதை வா.சா.ஆ.4 ஆவணங்கள் மூலம் நிரூபித்துள்ளார்கள். மேலும் வழக்கில் உள்ள தரப்பினர்களின் உறவு முறை இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட வா.சா.ஆ.5 உயில் ஆவணத்தின் மூலம் உண்மையானது என்பது தெரியவருகிறது. மேலும் வா.சா.ஆ.5 உயில் ஆவணத்தின் மூலமாக வழக்குச் சொத்துகள் ராஜம்மாளுக்கு அவருடைய பெற்றோர்கள் வழியில் வாரிசு முறைப்படி கிடைத்தது என்பது தெரிய வருகிறது. மேற்படி வா.சா.ஆ.5 உயிலை பரிசீலிக்கும் போது வழக்குச் சொத்துக்களில் 1-ம் பிரதிவாதி ஸ்ரீதர் தனக்கு பங்கு வேண்டாம் என்று எழுதிக் கொடுத்த பத்திரம் கோபிசெட்டிபாளையம் சார்பு நீதிமன்றம் மே.மு.வ.எண்.30/1982-ன்படி உண்மையானது என்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக

சொல்லப்பட்டுள்ளது. எனவே மேற்படி ஸ்ரீதருக்கு வழக்குச் சொத்தில் பங்கு இல்லை என்பதும், வாதிகளின் வழக்கு விவரம் உண்மையானது என்ற விவரம் தெரிய வருகிறது.

6.3. மேலும் மேற்படி உயிலில் தன்னுடைய மகள்கள் ஜோதி, கிருஷ்ணவேணி, வெங்கடேஷ்வரி ஆகியோர்களுக்கு தான் போதிய தகுதியுடனும், சீர் சிறப்புகளுடனும் திருமணம் செய்து வைத்ததால் அவர்களுக்கு பாகம் இல்லை என்று சொல்லப்பட்டுள்ளது. தன்னுடைய மற்ற மகன்களான துரைசாமி கலப்பு திருமணம் செய்து கொண்டதால் அவருக்கு பாகம் கிடைக்க கூடியதில்லை என்றும், சுகுமார் தனியாக குடித்தனம் செய்து வருவதால் அவருக்கு ரூ.1,00,000/- கிடைக்க கூடியது என்றும், அதை 4-ம் பிரதிவாதியான ஜவகர் கொடுத்து ரசீது பெற்றுக் கொள்ள வேண்டுமென்றும், மற்றபடி தன்னுடைய சொத்தை 4-ம் பிரதிவாதியும், மனநிலை சரியில்லை என்று சொல்லப்படும் 6-ம் பிரதிவாதியும் அனுபவித்துக் கொள்ள வேண்டுமென்றும், 4-ம் பிரதிவாதி 6-ம் பிரதிவாதிக்கு கார்டியனாக இருந்து செயல்பட வேண்டுமென்று சொல்லப்பட்டுள்ளது. மேற்படி உயில் நடைமுறைக்கு வந்ததாக சொல்லி தான் பிரதிவாதிகள் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட வா.சா.ஆ.6 செட்டில்மெண்ட் பத்திரத்தையும், வா.சா.ஆ.7 பாக பிரிவினை பத்திரத்தையும் ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்பது தெரியவருகிறது. ஆனால் மேற்படி உயிலில் சொல்லப்பட்டபடி சுகுமாருக்கு ரூ.1,00,000/- கொடுக்க வேண்டும் என்பதை இதுவரை செயல்படுத்தவில்லை என்பதும் தெரிய வருகிறது.

6.4. ஆனால் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட வா.சா.ஆ.16 நி.ம.எண்.41/2008 சத்தியமங்கலம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுவை பரிசீலிக்கும் போது மேற்படி இந்த வழக்கில் உள்ள 3-ம் பிரதிவாதி ஜோதி என்பவர் பாக பிரிவினை கேட்டு அ.வ.எண்.307/1987 என்ற

வழக்கை சத்தியமங்கலம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து 17.08.1987—ல் முதல்நிலை தீர்ப்பாணையும், 14.11.1995—ல் இறுதிநிலைத் தீர்ப்பாணையும் பெற்றிருக்கிறார் என்பதும் அதன்படி வழக்குச் சொத்துக்களை 8 பாகங்களாக பிரித்து அதில் ஜோதிக்கு ஒரு பாகத்தை கொடுக்க வேண்டும் என்பதும், ஆனால் அது ராஜம்மாளின் ஆயுளுக்கு பின்னிட்டு தான் சுவாதீனம் கிடைக்கும் என்றும் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி அ.வ.எண்.307/1987 வழக்கிற்கும் இந்த வழக்கு சொத்திற்கும் எந்த தொடர்பும் இல்லை என்பது தெரிய வருகிறது.

6.5. ஆனால் வா.சா.ஆ.5 உயில் ஆவணத்தின்படி உரிமையியல் கோரும் 4 மற்றும் 6 பிரதிவாதிகள் மேற்படி இறந்து போன சுகுமாரிடமோ அல்லது அவருடைய வாரிசுகளான இந்த வாதிகளிடமோ ரூ.1,00,000/— கொடுத்து ரசீது பெற்றுக் கொள்ளவில்லை என்பது தெரிய வருகிறது. எனவே மேற்படி சொத்துக்களைப் பொறுத்து மேற்படி 4,6,7 பிரதிவாதிகள் தங்களுக்குள் பாக பிரிவினை செய்து கொண்டுள்ள நிலையில் இந்த வாதிகளுக்கு கிடைக்கும் தொகையைப் பொறுத்து எந்த விவரமும் செல்லாதது ஏற்றுக் கொள்ளக் கூடியதில்லை என்று நீதிமன்றம் கருதுகிறது. எனவே மேற்படி உயில் மோசடியானது என்பதைப் பொறுத்து வாதிகள் தரப்பில் ஆட்சேபனை செய்யப்பட்டாலும், அந்த உயில் உண்மையானது என்பதை நிரூபிக்கும் வகையில் பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் ஆஜராகி ஆட்சேபனை செய்யாததாலும், அதை நிரூபிக்க முன் வராததாலும் இந்திய சாட்சிய சட்டப்பிரிவு 68—ன்படியும்,

Section 68 - Proof of execution of document required by law to be attested

If a document is required by law to be attested, it shall not be used as evidence until one attesting witness at least has been called for the purpose of proving its execution, if there be an attesting witness alive, and subject to the process of the Court and capable of giving evidence:
[Provided that it shall be necessary to call an attesting witness in proof of the execution of any document, not being a Will, which has been registered in accordance with the provisions of the Indian Registration Act, 1908 (16 of 1908),

unless its execution by the person by whom it purports to have been executed is specifically denied.]

*இந்திய வாரிசுரிமைச் சட்டம் 63(சி)—ன்படியும்*

63. Execution of unprivileged wills.-Every testator, not being a soldier employed in an expedition or engaged in actual warfare, 1*[or an airman so employed or engaged,] or a mariner at sea, shall execute his will according to the following rules:--
(a) The testator shall sign or shall affix his mark to the will, or it shall be signed by some other person in his presence and by his direction.
(b) The signature or mark of the testator, or the signature of the person signing for him, shall be so placed that it shall appear that it was intended thereby to give effect to the writing as a will.
(c) The will shall be attested by two or more witnesses, each of whom has seen the testator sign or affix his mark to the will or has seen some other person sign the will, in the presence and by the direction of the testator, or has received from the testator a personal acknowledgment of his signature or mark, or of the signature of such other person; and each of the witnesses shall sign the will in the presence of the testator, but it shall not be necessary that more than one witness be present at the same time, and no particular form of attestation shall be necessary.

*உயில் இந்த நீதிமன்றத்தில் நிரூபிக்கப்படாத நிலையிலும், மேற்படி உயில் இதுவரை எந்த நீதிமன்றத்தாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டதாக பிரகடணப்படுத்தப்படாததாலும் மேற்படி ராஜம்மாளின் சொத்தில் இந்த வாதி வழக்குரையில் சொல்லியுள்ளவாறு சுகுமாருக்கு ஒரு பங்கு கிடைக்க கூடியது என்பதால் இந்து வாரிசுரிமைச் சட்டப்பிரிவு 14—ன்படி*

14. Minor's domicile. -The domicile of a minor follows the

domicile of the parent from whom he derived his domicile of origin. Exception.--The domicile of a minor does not change with that of his parent, if the minor is married, or holds any office or employment in the service of Government, or has set up, with the consent of the parent, in any distinct business.

*வாதிகள் கோரியுள்ளபடி பாக பிரிவினை முதல்நிலை பிறப்பிக்கலாம் என்றும் முடிவு செய்து இந்த வழக்கை அனுமதிக்கலாம் என்று தீர்மானிக்கப்படுகிறது.*

7. இறுதியாக, வாதிகள் வழக்குரையில் கோரியுள்ளவாறு வழக்குச் சொத்துக்களை 7 சம பாகங்களாக நலன்திலன் கண்டு பிரித்து அதில் ஒரு பாகத்தை இந்த வாதிகளுக்கு ஒதுக்கி பாக பிரிவினை முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்படுகிறது. பிரதிவாதிகள் வாதிகளுக்குண்டான 1/7 பாகத்தை ஒதுக்கி, 6 மாத காலத்திற்குள் தனி சுவாதீனம் கொடுக்க தவறினால் இறுதிநிலை தீர்ப்பாணைக்கு வாதிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது. பிரதிவாதிகள் வழக்குச் சொத்தை மூன்றாம் நபர்களுக்கு விற்பனை செய்யக் கூடாது என்று உத்தரவிடப்படுகிறது. தரப்பினர்களின் உறவுமுறைகளைக் கருத்தில் கொண்டு அவரவர் செலவுத் தொகைகளை அவரவர்களே ஏற்க வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் படித்துப்பார்த்து பிழைத் திருத்தங்கள் செய்யப்பட்டு 2017-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 18-ம் நாளாகிய இன்று என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(ஒம்)டி.செல்வம்
சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.

<u>விசாரிக்கப்பட்ட சாட்சிகள்:</u>
<u>வாதி தரப்பில்:</u>

1. வா.சா.1 திருமதி. லட்சுமி
2. வா.சா.2 திரு. நாகராஜன்

<u>வாதி தரப்பில் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்:</u>

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | வா.சா.ஆ.1 | 28.02.1996 | சாமியப்ப முதலியார் இறப்புச் சான்றிதழ் | அசல் |
| 2. | வா.சா.ஆ.2 | 06.05.2006 | ராஜம்மாள் இறப்புச் சான்றிதழ் | அசல் |
| 3. | வா.சா.ஆ.3 | 19.02.2001 | சுகுமாரின் இறப்புச் சான்றிதழ் | அசல் |

| | | | | |
|---|---|---|---|---|
| 4. | வா.சா.ஆ.4 | 12.03.2001 | வாரிசுச் சான்றிதழ் | அசல் |
| 5. | வா.சா.ஆ.5 | 27.08.1996 | உயில் சாசனம் | நகல் |
| 6. | வா.சா.ஆ.6 | 14.01.2008 | செட்டில் மெண்ட் பத்திரம் | நகல் |
| 7. | வா.சா.ஆ.7 | 25.11.2008 | பாகப் பிரிவினை பத்திரம் | நகல் |
| 8. | வா.சா.ஆ.8 | 23.09.2010 | வழக்குரைஞர் அறிவிப்பு | நகல் |
| 9. | வா.சா.ஆ.9 | 27.09.2010 | அஞ்சலக ஒப்புதல் அட்டை | நகல் |
| 10. | வா.சா.ஆ.10 | 27.09.2010 | அஞ்சலக ஒப்புதல் அட்டை | அசல் |
| 11. | வா.சா.ஆ.11 | 28.09.2010 | அஞ்சலக ஒப்புதல் அட்டை | அசல் |
| 12. | வா.சா.ஆ.12 | 25.09.2010 | அஞ்சலக ஒப்புதல் அட்டை | அசல் |
| 13. | வா.சா.ஆ.13 | 24.09.2010 | அஞ்சலக ஒப்புதல் அட்டை | அசல் |
| 14. | வா.சா.ஆ.14 | 25.09.2010 | அஞ்சலக ஒப்புதல் அட்டை | அசல் |
| 15. | வா.சா.ஆ.15 | 11.10.2010 | பதில் அறிவிப்பு | அசல் |
| 16. | வா.சா.ஆ.16 | 13.07.2007 | நி.ம.எண்.41/2008–ன் மனு | நகல் |
| 17. | வா.சா.ஆ.17 | 24.06.2011 | நி.ம.எண்.41/2008–ல் தாக்கல் செய்த மனு | நகல் |

(ஒம்)டி.செல்வம்
சார்பு நீதிபதி
சத்தியமங்கலம்.